RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
## MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 218 | ஆகஸ்டு.10 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# 6 தளங்கள், 400 படுக்கை வசதிகள்: தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை முதல்வர் திறந்து வைத்தார்

தாம்பரம்: ஆக.10-

தாம்பரத்தில் ரூ.110 கோடியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

குரோம்பேட்டையில் உள்ள தாம்பரம் தாலுகா அரசு மருத்துவமனையை செங்கல்பட்டு மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த தமிழக அரசு முடிவு செய்து மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி 2021ம் ஆண்டு அனுமதி வழங்கியதோடு, ரூபாய் 110 கோடி இதற்காக ஒதுக்கப்பட்டது.

மேலும் தாம்பரம் சானடோரியம் ஜிஎஸ்டி சாலையில் தேசிய சித்த மருத்துவமனை வளாகம் அருகே உள்ள அரசு காசநோய் மருத்துவமனை வளாகத்தில் சுகாதாரத் துறைக்கு சொந்தமான இடத்தில் சுமார் ஐந்து ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டு நிலம் சுத்தம் செய்யப்பட்டு மருத்துவமனை கட்டிடப் பணிகள் கடந்த 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

6 தளங்கள் கொண்ட 400 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு வந்த இந்த மருத்துவமனை கட்டுமான பணிகள் முடிவடைந்த நிலையில் மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்த வைக்கும் நிகழ்ச்சி இன்று ( ஆக.9) நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு ரூபாய் 115 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாவட்ட




தலைமை மருத்துவமனை புதிய கட்டிடம், ரூ. 7.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை புறநகர் பிரிவு, ரூ. 1.90 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வக கட்டடம் மற்றும் 3 நகர்ப்புற துணை சுகாதார நிலையங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், எம்.பி, டி.ஆர்.பாலு, சட்டப்பேரவை உறுப்பினர்கள் தாம்பரம் எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் இ.கருணாநிதி, செங்கல்பட்டு ஆட்சியர் தி. சினேகா மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

புதிய மாவட்ட மருத்துவமனை 6 மாடி கொண்டது. இக்கட்டடத்தில், 4 அறுவை சிகிச்சை அரங்கம், 3 அவசர அறுவை சிகிச்சை அரங்கம், 111 தீவிர சிகிச்சை படுக்கை, 289 படுக்கை கொண்ட பொதுப் பிரிவு என, 400 படுக்கை வசதிகள் உள்ளன.

இந்த மருத்துவமனையில் தரைத்தளத்தில் அவசர சிகிச்சை பிரிவு, எக்ஸ்ரே, சிடி, எம்ஆர்ஐ ஸ்கேன், மருந்தகம், புற நோயாளி பிரிவு. முதல் தளத்தில் அவசர அறுவை சிகிச்சை அரங்கம், நம்பிக்கை மையம், குடும்ப நலப் பிரிவு, கர்ப்பிணிகளுக்கான புறநோயாளிகள் பிரிவு, கால் போஸ் கோபி உள்ளிட்டவையும். 2வது தளத்தில் மகப்பேறு அறுவை சிகிச்சை பிரிவு, பிரசவ அறை, மகப்பேறு உயர் தீவிர சிகிச்சை பிரிவு, மகப்பேறு அறுவை அரங்கம், பிரசவ முன் கவனிப்பு அறை, அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவு.

3வது தளத்தில் பிறந்த குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, நீரிழிவு பிரிவு, ரத்த வங்கி, பிரசவ பின் கவனிப்பு பிரிவு, குடும்ப நல அறுவை சிகிச்சை பிரிவு. 4வது தளத்தில் ஆண்களுக்கான அறுவை சிகிச்சை வார்டு, பெண்களுக்கான அறுவை சிகிச்சை வார்டு, தீக்காயப்பிரிவு ஆய்வகம்.

5வது தளத்தில் அவசர அறுவை சிகிச்சை அரங்கம், தீவிர சிகிச்சை பிரிவு, உயர் சார்பு அலகு பிரிவு, பொது சிகிச்சை பிரிவு. 6வது தளத்தில் குழந்தைகள் பொது பிரிவு, ஆண்கள் பொது பிரிவு, பெண்கள் பொது பிரிவு என மொத்தம் ஆறு தளத்தில் மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் சிறப்பாக தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக திறக்கப்படும் இந்த மருத்துவமனையால் தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட புறநகர் பகுதி மக்கள் பயனடையும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி சாலையில் ஏற்படும் விபத்துகளில் சிக்குபவர்கள் மேல் சிகிச்சைக்கு சென்னைக்கு கொண்டு செல்லும் வழியில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்ட நிலையில் தற்போது அதிநவீன கருவிகளுடன் அனைத்து சிகிச்சைகளும் புதிய மருத்துவமனையில் வழங்கப்பட உள்ளதால் விபத்து உயிரிழப்புகள் பெருமளவு குறையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.



# அவசரகதியில் மாநில கல்விக் கொள்கை வெளியீடு: எல்.முருகன், நயினார் நாகேந்திரன் விமர்சனம்

சென்னை: ஆக.10-

தமிழக அரசு சார்பில் நேற்று வெளியிடப்பட்ட மாநிலக் கல்விக் கொள்கையை மத்திய இணையமைச்சர் உள்ளிட்டோர் விமர்சித்துள்ளனர்.

மத்திய இணையமைச்சர் எல்.முருகன்: தமிழில் புதிது புதிதாக பெயர் வைத்து, மத்திய அரசின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி காலத்தை ஓட்டி வரும் திமுக அரசின் அடுத்த வெளியீடாகவே இந்த மாநில கல்விக் கொள்கை இருக்கிறது. ஆங்கிலத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டு, இவர்கள் தமிழில் வெளியிட்டுள்ள மாநில கல்விக் கொள்கையே புரியவில்லை.

இருமொழிக் கொள்கை செயல் படுத்தப்படும் என்றால் தனியார் பள்ளிகளில் தேசிய கல்விக் கொள்கை கூறியபடி மூன்றாவது மொழி இருப்பதை திமுக அரசு ஏற்றுக் கொள்கிறதா, இதற்கு பெயர் தான் திமுகவின் சமூக நீதியா, தாய்மொழி வழிக் கல்வியைத் தானே தேசிய கல்விக் கொள்கையும் வலியுறுத்துகிறது.

தமிழகப் பள்ளி மாணவர்கள் எண்களை அடையாளம் காணக்கூட சிரமப்படுவதாக ஆய்வுகள் கூறுகிறதே, அரசு பள்ளிகளில் தரமில்லை எனக் கூறி, கூலித் தொழிலாளி கூட தனது குழந்தைகளை தனியார் பள்ளிகளில் சேர்ப்பது ஏன், கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், மத்திய அரசு பங்கு நிதியை வழங்கிய பிறகும், தமிழக அரசு அதைச் செலுத்தாத காரணத்தால் தனியார் பள்ளிகள் கட்டணத்தை செலுத்துமாறு பெற்றோரை நிர்பந்திப்பதாக செய்திகள் வந்துள்ளன. இந்த கேள்விகளுக்கு முதல்வர் பதிலளிக்க வேண்டும்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: தேசிய கல்விக் கொள்கையை வெட்டி வீராப்புக்காக எதிர்த்துவிட்டு, பின் மாணவர் நலனில் அக்கறை கொண்டது போல மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்குவதாக மக்களின் வரிப்பணத்தை வீணடித்து மாணவர்களை திமுக அரசு ஏமாற்றியுள்ளது.

மும்மொழிக் கொள்கைக்கு மக்கள் அளித்து வரும் ஆதரவை பார்த்து பயந்து, அவசரகதியில் தேசிய கல்விக் கொள்கையை பிரதி எடுத்து மாநிலக் கல்விக் கொள்கையாக திமுக அரசு வெளியிட்டிருக்கிறது. அதே நேரம், தேசிய கல்விக் கொள்கையின் பல முக்கிய அம்சங்களை இடம் பெறச் செய்யாதது மத்திய அரசு மீதுள்ள காழ்ப்புணர்ச்சியை காட்டுகிறது.

விசிக கோரிக்கை

விசிக பொதுச்செயலாளர் துரை.ரவிக்குமார் எம்.பி.: மாநிலக் கல்விக் கொள்கையில் பிளஸ் 1 பொதுத்தேர்வை ரத்து செய்தது தவறான முடிவு. இது உயர் கல்வியின் தரத்தையும், தொழிற்கல்வியின் தரத்தையும் கெடுத்துவிடும். இந்த முடிவை முதல்வர் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

# தொழிலாளர் நலன் காப்பதில் தமிழகம் முன்னோடி: உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

சென்னை: ஆக.10-

தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் 100 பெண் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு தலா ரூ. 1 லட்சம் மானியத்துடன் ஆட்டோக்கள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை ராயப்பேட்டை ஒய்எம்சிஏ மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று, அமைப்பு சாரா பெண் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஆட்டோக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: தற்போது தொழிலாளர் நலத்துறை சார்பில் 20 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்னேற



வேண்டும் என ஏராளமான திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்.மகளிர் விடியல் பயணம் திட்டம், புதுமை பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் என பெண்களின் முன்னேற்றத்துக்காக ஏராளமான திட்டங்களை முதல்வர் உருவாக்கி கொடுத்து கொண்டிருக்கிறார்.

அந்தவகையில், தொழிலாளர் நலத்துறை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஆட்டோக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2023ம் ஆண்டு 500 ஆட்டோக்களும், 2024ம் ஆண்டு ஆயிரம் ஆட்டோக்களும் வழங்கப்பட்டன. இந்தாண்டு முதல்கட்டமாக 100 மகளிருக்கு ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன.

விரைவில் 1000 பேருக்கு ஆட்டோக்கள் வழங்கப்படும். இன்று இந்தியாவிலேயே மகளிர், திருநங்கைகளை ஆட்டோ ஓட்டுநர்களாக பயிற்சி கொடுத்து, நலவாரியத்தில் உறுப்பினர்களாக சேர்த்து அவர்களுக்கு மானியத்துடன் ஆட்டோ வழங்கும் ஒரே மாநிலம் தமிழகம் தான்.

அந்தவகையில், தொழிலாளர் நலன் காப்பதில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பேசுகையில், "தமிழகம் முழுவதும் இதுவரை 329 இடங்களில் மெகா வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

அதன் மூலம் 2.70 லட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். தொழிலாளர் நல வாரியத்தில் 49 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வாரியத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2,832 கோடியில் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது,"என்றார். இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலர் கொ.வீரராகவ ராவ், ஆணையர் ராமன், துணை மேயர் மகேஷ்குமார் உளளிட்டோர் பங்கேற்றனர்.



# உலக நன்மை வேண்டி பழநியில் ஜப்பான் பக்தர்கள் பால்குடம் எடுத்து வழிபாடு

பழநி, ஆக.10-

உலக நன்மை வேண்டி பழநி முருகன் கோயிலில் ஜப்பான் பக்தர்கள் பால்குடம் எடுத்து சிறப்பு வழிபாடு செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி மலையடிவாரத்தில் போகர் சித்தரின் சீடரான புலிப்பாணி சித்தரின் ஜீவசமாதி மற்றும் ஆசிரமம் உள்ளது. இங்கிருந்து சனிக்கிழமை (ஆக.9) காலை உலக நன்மை வேண்டி, ஸ்ரீலஸ்ரீ சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள் தலைமையில் தொழிலதிபர் கோபால் பிள்ளை சுப்பிரமணியம் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பக்தர்கள் 100 பேர், தமிழர் பாரம்பரிய முறைப்படி வேட்டி, சேலை அணிந்து மேளம் தாளம் முழங்க, திருஆவினன்குடி குழந்தை வேலப்பர் கோயிலுக்கு பால்குடம் எடுத்து சென்றனர்.

அங்கு, முருகனுக்கு பாலபிஷேகம் செய்து, சிறப்பு வழிபாடு நடத்தினர். இதைத் தொடர்ந்து, பழநி மலைக்கோயிலுக்கு படிப்பாதை வழியாக சென்ற அவர்கள், தண்டாயுதபாணி சுவாமி, போகர் ஜீவ சமாதியில் வழிபட்டனர். பின்னர், அடிவாரத்துக்கு வந்து புலிப்பாணி ஆசிரமத்தில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர்.

# செந்தில் பாலாஜியின் சகோதரர் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல ஐகோர்ட் அனுமதி

சென்னை, ஆக.10-

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமார் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல நிபந்தனைகளுடன் சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதய சிகிச்சை மேற்கொள்ள அமெரிக்கா செல்ல அனுமதி கோரி அசோக்குமார் சென்னை உயர் நீதிமன் றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்த போது, அசோக்குமார் அமெரிக்கா செல்ல அனுமதித்தால் என்னென்ன நிபந்தனைகளை விதிக்கலாம் என அமலாக்கத்துறை பதிலளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர். இந்நிலையில், இந்த மனு நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆஜரான அமலாக்கத்துறை வழக்கறிஞர், நிபந்தனைகள் அடங்கிய பட்டியல் தாக்கல் செய்தார். இதனையடுத்து, இந்த வழக்கில் உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள், விசாரணை நீதிமன்றத்தில் ஐந்து லட்சம் ரூபாய் டெபாசிட் செய்ய வேண்டுமெனவும், மகளின் பாஸ்போர்ட்டை ஒப்படைக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டு அசோக்குமார் அமெரிக்கா செல்ல அனுமதியளித்தனர்.

# பாஜக நிர்வாகி ஜாமீன் விவகாரம்: புகார்தாரரின் ஆட்சேபத்தை பரிசீலிக்க சேலம் நீதிமன்றத்துக்கு ஐகோர்ட் உத்தரவு


சென்னை: ஆக.10-

வன்கொடுமை தடைச் சட்ட வழக்கில் பாரதிய ஜனதா கட்சி ஸ்டார்ட்அப் விங் மாநிலச் செயலாளர் சிபி சக்கரவர்த்தி மற்றும் அவரது பெற்றோர் சரணடைந்து ஜாமீன் கோரினால், புகார்தாரரின் ஆட்சேபத்தை கேட்டு முடிவெடுக்க வேண்டும் என சேலம் சிறப்பு நீதிமன்றத்துக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேலம், ஏற்காட்டில் நிலப் பிரச்சினை தொடர்பாக, பக்கத்து எஸ்டேட் காவலாளி வெள்ளையன் என்பவரை, பாரதிய ஜனதா கட்சி மாநிலச் செயலாளர் சிபி சக்கரவர்த்தி மற்றும் 3 பேர் சேர்ந்து, கடுமையாக தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, சிபி சக்கரவர்த்தி,





தன்னை சாதிப்பெயரை கூறி திட்டி, தாக்கியதாக வெள்ளையன் அளித்த புகாரின் அடிப்படையில், ஏற்காடு போலீஸார், சிபி சக்கரவர்த்தி, அவரது தந்தை மணவாளன், மனைவி சித்ரா ஆகியோருக்கு எதிராக வன்கொடுமை தடைச் சட்டம் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.


இந்த வழக்கு தொடர்பாக, சேலம் நீதிமன்றத்தில் சரணடைந்த நாளில் ஜாமீன் வழங்கக் கோரி, சிபி சக்கரவர்த்தி மற்றும் அவரது பெற்றோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவில், தங்களுக்கு சொந்தமான நிலத்தை அபகரிக்க முயற்சித்ததாக புகார் அளித்ததால், பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது எனவும், முன் ஜாமீன் பெறுவதை தடுக்கும் நோக்கத்தில் வன்கொடுமை தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மனுவை விசாரித்த நீதிபதி பரத சக்கரவர்த்தி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் சரணடைந்து ஜாமீன் கோரும் போது, புகார்தாரரின் ஆட்சேபங்களை கேட்ட பின் ஜாமீன் மனு மீது முடிவெடுக்க வேண்டும் என சேலம் சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.






■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கோணம் அரசு பொறியியல் கல்லூரி வேலையில் சேர குமரி மாவட்டம்,லாயம் பகுதியை சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கு போலி நியமன ஆணை கொடுத்து மோசடியில் ஈடுபட்ட விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் பகுதியை சேர்த்த செல்வகுமார் (50), திண்டிவனம் சஞ்சீவிராயன் பேட்டை பகுதியை சேர்ந்த முகமது இஸ்மாயில் (51),திண்டிவனம் ஆசிரியர் நகர் பகுதியை சேர்ந்த பாபு வயது (42) ஆகிய மூன்று பேரை போலீசார் கைது செய்து விசாரணை மேலும் தமிழக முழுவதும் 13 பேரை ஏமாற்றியதும் தெரியவந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அரசு பொறியியல் கல்லூரியில் போலி நியமன ஆணை வழங்கிய மோசடி சமீபத்தில் 48 மணி நேரத்தில் 3 பேர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர் இந்த மோசடி சமீபத்தில் மேலும் இந்த வழக்கில் வேறு யாருக்காவது தொடர்பு உண்டா என விசாரணை நடைபெற்று வருவதாக நாகர்கோவிலில் காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்துள்ளார்.



திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு

## கூடுதல் நிவாரண நிதி ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையினை கேஆர்.பெரியகருப்பன் நேரில் சென்று வழங்கி, ஆறுதல் கூறினார்

சிவகங்கை, ஆக.10

தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம் கடந்த 1.7.2025 அன்று அலைபேசியின் வாயிலாக தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவி களையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள். அதன்படி, சிபிஐ விசாரணை குழுவின் சார்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், கடந்த 2.7.2025 அன்று கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை, மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமார் (வயது 27) அவர்களுக்கு, சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், (காரைக்குடி) டெக்னீசியன் பணியிடத்திற்கென உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

அக்குடும்பத்தினரின் கோரிக்கைக்கிணங்க மதுரையிலுள்ள ஆவின் நிறுவனத்தில் பணி நியமன ஆணையினை மாற்றி வழங்கிடவும்,

முன்னதாக இக்குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட வீட்டு மனை பட்டா தொடர் பாக, மாற்று இடம் வேண்டி விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர் பாகவும், உரிய நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கடந்த 14.7.2025 அன்று கூட்டுறவுத்துறை அமைச்சர் .கேஆர். பெரியகருப்பன் அவர்கள், அக்குடும்பத்தினருக்கு ரூபாய் 7.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவிற்கிணங்க, தமிழக அரசின் சார்பில் கூடுதல் நிவாரண நிதி ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையினையும், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில், அக்குடும்பத்தினரிடம் நேரில் வழங்கி, ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.சேங்கைமாறன், திருப்புவனம் வட்டாட்சியர் திரு.விஜயகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூர்யா நகர் பகுதியில் ரூபாய் 3.93 கோடி மதிப்பீட்டில் 3.59 கீ.மி. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார்.

## இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, ஆயிரவைசிய மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் 'நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்

இராமநாதபுரம், ஆக.10-

'நலம் காக்கும் ஸ்டாலின்"; எனும் திட்டம் மக்களைத் தேடி முழு உடல் பரிசோதனை திட்டம் என்கிற வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முழு உடல் பரிசோதனை செய்து கொள்வதற்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.15,000 வரையிலும், அரசு மருத்துவமனைகளில் ரூ.4,000ஃ வரை செலவாகும். முழு உடற்பரிசோதனை என்பது இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில் இத்திட்டம் பொதுமக்களுக்கு இலவசமாக முழு உடல் பரிசோதனை செய்து தரப்படும் திட்டமாகும். இந்த திட்டத்தை பொறுத்த வரை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மகப்பேறுயியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம்,



இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெற இருக்கிறது.

மேலும் இந்த முகாமில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தனை சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை கண் டறிந்து அங்கேயே தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டை மற்றும் ருனுஃஐனு உடனடியாக வழங்கப்படுகிறது. மேலும் புதிதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்திற்கு இணைவ தற்குரிய வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு மருத்துவ அறிக்கைகள் அனைத்தும் ர்ஐஆளு 3.0 மூலம் கணினி மையமாக் கப்பட்டு முகாமிலேயே மருத்துவ பரிசோதனை சான்றுகள் மற்றும் மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

இம்முகாமில் பொதுமக் களுக்கு முழு உடல் பரிசோ தனை செய்து மருத்து வர்களின் ஆலோசனைகளை பெற்று தேவை யான நபர்களுக்கு இம்முகாமிலே மருந்து, மாத்திரைகள் வழங்கப்படும். உயர் சிகிச்சை தேவைப்படு பவர் களுக்கு அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படும். இதுபோல் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் மருத்துவ முகாமில் சிறியவர் முதல் பெரியவர் என பொதுமக்கள் முழு அளிவில் பங்கேற்று முழு உடல் பரிசோதனை செய்து உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இம்முகாமில் மருத்துவ பரிசோதனை செய்து கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்கள்.

இம்முகாமில் பரமக்குடி சுகாதார அலுவலர் மரு.லெட்சுமி நாராயணன் அவர்கள், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அர்ஜுன் குமார் அவர்கள், இணை இயக்குநர் மரு.பிரகலாதன் அவர்கள், பரமக்குடி நகர் மன்றத்தலைவர் திரு.சேது கருணாநிதி அவர்கள், பரமக்குடி நகர் மன்ற துணைத்தலைவர் திரு.மு.நு.குணசேகரன் அவர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு.கார்த்திக் அவர்கள், மரு.ஜெயந்த் அவர்கள், மரு.ராஜேஷ் அவர்கள், மரு.ராமச்சந்திரன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திருச்சியில் இன்று காமராஜரின் 123 வது பிறந்தநாள் விழா நடைபெற உள்ளது. இதில் தமிழக விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பாதுகாப்பு கட்சியின் நிறுவனர் தலைவர் சத்தியம் சி.சரவணன் அவர்களை பனைமரத் தொழிலாளர் அணி நிர்வாகிகள் சந்தித்த தருணம்



## இந்திய நீதி அறிக்கை 2025: முதல் 5 இடங்களைப் பிடித்த தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்கள்

புதுடெல்லி, ஆக.10-

காவல்துறை, சிறைத்துறை, நீதித்துறை, சட்ட உதவி உள்ளிட்டவற்றின் அடிப்படையிலான நீதி மதிப்பீட்டில் நாட்டின் 18 பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு 5ம் இடம் பிடித்துள்ளது. முதல் ஐந்து இடங்களை தென் மாநிலங்களே பிடித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய நீதி அறிக்கை 2025 தற்போது வெளியாகி உள்ளது. காவல்துறை, சிறைத்துறை, நீதித்துறை, சட்ட உதவிகள் உள்ளிட்டவற்றின் மூலம் மக்களுக்கு நீதி வழங்குவதில் மாநிலங்களின் தர நிலைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில், முதல் 6 இடங்களைப் பெற்றுள்ள மாநிலங்கள் சிறப்பானவை என்றும், அடுத்த 6 இடங்களைப் பெற்ற மாநிலங்கள் சுமாரானவை என்றும் கடைசி 6 இடங்களைப் பெற்ற மாநிலங்கள் மோசமானவை என்றும் மதிப்பிடப்பட்டுள்ளன.

அதன்படி, நாட்டின் 18 பெரிய மாநிலங்களில் கர்நாடகா, 10க்கு 6.78 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்துள்ளது. ஆந்திரப் பிரதேசம் 6.32 புள்ளிகள் பெற்று 2ம் இடத்தையும், தெலங்கானா 6.15 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. 6.09 புள்ளிகளுடன் கேரளா 4ம் இடத்தையும், 5.62 புள்ளிகளுடன் தமிழ்நாடு 5ம் இடத்தையும், 5.54 புள்ளிகளுடன் சத்தீஸ்கர் 6ம் இடத்தையும் பிடித்துள்ளன.

5.42 புள்ளிகளுடன் 7ம் இடத்தில் மத்தியப் பிரதேசமும், 5.41 புள்ளிகளுடன் 8ம் இடத்தில் ஒடிசாவும், 5.33 புள்ளிகளுடன் 9ம் இடத்தில் பஞ்சாபும் உள்ளன. மகாராஷ்டிரா 5.12 புள்ளிகளுடன் 10ம் இடத்தையும், குஜராத் 5.07 புள்ளிகளுடன் 11ம் இடத்தையும், ஹரியானா 5.02 புள்ளிகளுடன் 12ம் இடத்தையும் பெற்றுள்ளன.

13ம் இடத்தை பிஹாரும் (4.88), 14ம் இடத்தை ராஜஸ்தானும்(4.83), 15ம் இடத்தை ஜார்க்கண்ட்டும்(4.78), 16ம் இடத்தை உத்தராகண்டும்(4.41), 17வது இடத்தை உத்தரப்பிரதேசமும்(3.92), 18வது இடத்தை மேற்கு வங்கமும்(3.63) பெற்றுள்ளன.

ஏழு சிறிய மாநிலங்களில் சிக்கிம், இமாச்சலப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், திரிபுரா, மேகாலயா, மிசோரம், கோவா ஆகிய மாநிலங்கள் ஒன்று முதல் 7 வரையிலான இடங்களைப் பெற்றுள்ளன.

## வண்டலூரில் அதிமுக சார்பில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.இராஜேந்திரன், பங்கேற்பு

வண்டலூர், ஆக.10-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியம் வண்டலூர் ஊராட்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக அதிமுக சார்பில் அண்ணா ஆட்டோ ஓட்டுநர் நலச்சங்கம் திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வண்டலூர் ரயில்வே நிலையம் மேம்பாலம் அருகே நடைபெற்றது. இதில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்/ செங்கல்பட்டு மாவட்ட கவுன்சிலருமான கஜா (எ) கஜேந்திரன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக வர்த்தகர் அணி செயலாளர்/ முன்னாள் அமைச்சருமான சி.த.செல்லப்பாண்டியன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் / முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லப் பாக்கம் ச.இராஜேந்திரன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் நாவலூர் முத்து, ஆகியோர்



கலந்து கொண்டு அண்ணா ஆட்டோ ஓட்டுநர் நலச்சங்கம் பெயர் பலகையை திறந்து வைத்து சிறப்புரை வழங்கி நூற்றுக்கு மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளர் வேதகிரி ஏற்பாட்டின் பேரில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய இளைஞரணி செயலாளர் கனி (எ) கணேசன், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் வெங்கடேசன், அண்ணா ஆட்டோ ஓட்டுனர் நலச்சங்க தலைவர் நடராஜன், மற்றும் அதிமுக கிளை கழக நிர்வாகிகள் உட்பட ஆட்டோ ஓட்டுநர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## செம்பாக்கத்தில் மனித நேய மக்கள் கட்சி சார்பில் மதுரை எழுச்சி பேரணி மற்றும் மாநாட்டின் தீர்மான விளக்க கூட்டம்

செம்பாக்கம், ஆக்.10-

மதுரையில் நடைபெற்ற மனித நேய மக்கள் கட்சியின் மதுரை எழுச்சி பேரணி மற்றும் மாநாட்டின் தீர்மான விளக்க கூட்டங்கள் 1000 இடங்களிள் நடத்து வேண்டும் என அக்கடசியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்களின் ஆணைகிணங்க செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் செம்பாக்கம் பகுதியில் பகுதி தலைவர் நாசர்பாஷா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மனித நேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச்செயலாளர் தாம்பரம் யாக்கூப், தலைமை கழக பேச்சாளர் கோவை செய்யது, மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாஹீர் உசேன் ஆகியோர் கலந்து கொண்டு தீர்மானம் விளக்க உரையாற்றினர். இதில் மதுரையில் நடைபெற்ற எழுச்சி பேரணி மற்றும் மாநாட்டில் பழைய முறைபடி பள்ளிவாசல் மூலமாக NOC பெற்று கொண்டு குடியிருப்புகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்க வேண்டும், காம்ராஜபுரம்




இஸ்லாமிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இஸ்லாமியர்களுக்கு அடக்கஸ்தலம் இடம் போதாத காரணத்தினால் மாற்று இடம் தரவேண்டும் உள்ளிட்ட 11 தீர்மானங்கள் நிறைவேற்றபட்டது. இதனை விளக்கு உரை ஆற்றினர். இதில் நிர்வாகிகள் முஹம்மது இக்பால், முஹம்மது ரபீக், முனவர் அலி, செய்யது முஹம்மது இப்ராஹீம் பைஃஜி, நூருல் அமின், முஹம்மது இம்தியாஸ், அக்மல் பாஷா, நாசர் அலி, அபூபக்கர் சித்திக், காஜாமொய்தீன், ஹாஜா மொய்தீன், முஹம்மது இஸ்மாயில், அப்துல் காதர், குலாம் முஹம்மது உசேன், ஜிந்தா மதார், முஹம்மது ஜமீல், ஜமால், தமீமுல் அன்சார், செய்யது இனாயத்துல்லா, அப்துல் உசேன், ஹயாத் (எ) இப்ராஹீம் மிஸ்பாஹி, தமீம் அன்சாரி, அப்துல் கறீம், எஸ்.எம்.அமீது அலி மற்றும் ஆண்கள், பெண்கள் என திரளாக கலந்து கொண்டனர்



■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வண்டியூர் தாகூர் வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி தொடங்கி வைத்து திட்ட அரங்கினை பார்வையிட்டு காச நோயளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்து உணவு பெட்டகத்தையும், மாற்றுத்திறாளிகளுக்கு நவீன செயற்கை கால்களையும் மற்றும் பயனாளிகளுக்கு காப்பீட்டு திட்ட அடையாள அட்டைகளையும் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் இ.ஆ.ப. அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் அழகாபுரி,குட்டி மேய்க்கிபட்டி, சின்ன இலந்தைகுளம்,பெரிய இலந்தைகுளம் ஊராட்சி களுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். முகாமில் வட்டாட்சியர்கள் ராமச்சந்திரன், பார்த்திபன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வள்ளி, கலைச்செல்வி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரேணுகா, கண்ணன்,ஜெய பிரகாஷ்,சுந்தர் ராஜ், ஊராட்சி செயலாளர்கள் பாலமுருகன், ஸ்டாலின், சுவேதா,போஸ் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கொண்டனர்.

# பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தில் மாநில அளவில் முதலிடம் பிடித்த கன்னியாகுமரி மாவட்டம் முளகுமூடு குழந்தை இயேசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவியர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்

கன்னியாகுமரி, ஆக.10-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் பள்ளி புத்தாக்க திட்டத்தில் மாநில அளவில் முதலிடம் பிடித்த முளகுமூடு குழந்தை இயேசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவியர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.




இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவிக்கையில் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கோப்பைகள் உலகளவில் குப்பைகளாக மாறுகின்றன. இவை பெரும்பாலும் கடலிலோ அல்லது குப்பைக் கிடங்குகளிலோ வந்து சேருகின்றன. பிளாஸ்டிக், தெர்மா கோலுக்கு மாற்றாக மறுபயன்பாட்டில் சுற்றுச்சுழலுக்கு மிகவும் உகந்த பொருட்களை தயாரிப்ப தேயாகும். இதனை கருத்தில் கொண்டு, பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 6 வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

அதன்ஒருபகுதியாக தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இணைந்து நடத்திய பள்ளிகளுக்கு இடையேயான தொழில் முனைவோர் சார்ந்த புத்தாக்க படைப்புகளுக்கான பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பூட் கேம்ப் மாநில அளவிலான கண்காட்சி போட்டியில் பங்கு பெற்ற கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த முளகுமூடு குழந்தை இயேசு உயர்நிலைப் பள்ளியில் 6 முதல் 8ம் வகுப்பு பிரிவில் பயிலும் மாணவிகளின் கண்டுபிடிப்பான பலா மர இலைகளை கொண்டு பாதுகாப்பான இயற்கை கிண்ணம் தயாரிக்கும் புத்தாக்க சிந்தனைக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சம் பரிசு பெற்றனர். சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் திரு.த.மோ.அன்பரசன் அவர்கள் காசோலை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள். மேலும் இதுபோன்று அனைத்து பள்ளிகளிலும் இப்பயிற்சிகளை வழங்கி படிக்கும் காலங்களிலே படிப்போடு சேர்ந்து தொழில்முனைவோர்களாக மாற்ற ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.


அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்களிடம் மாணவர்கள் தயாரித்த பலா மர இலைகளைக்கொண்டு தயாரித்த இயற்கை கிண்ணங்களையும், பாராட்டு சான்றிதழ்களை நேரில் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.பாலதண்டாயுதபாணி, தொழில் முனைவோர் மேம்பாட்டு துறை மாவட்ட திட்ட மேலாளர், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கல்வித்துறை ), பள்ளி தலைமை ஆசிரியர், வழிகாட்டி ஆசிரியை மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

பெரும்பாக்கம், ஆக.10-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஆகஸ்ட் (9)ல் நடைபெற்றது. சோழிங்கநல்லூர், எம்.எல்.ஏ, ச. அரவிந்த் ரமேஷ் முகாமை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும் உதவிகளையும் செய்து கொடுத்தார். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகள் எம்.எல்.ஏ, வழங்கினார்.



இந்நிகழ்வில் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர், கோவிலம்பாக்கம்,

ஜி. வெங்கடேசன், மாவட்ட கவுன்சிலர், என் .வேதகிரி , ஊராட்சி செயலர், நாராயணன் மற்றும் அனைத்து துறைகள் சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமில் 2500 மனுக்கள் பெறப்பட்டது என்று தகவலைத் தொடர்ந்து கடைசி வரை வி.ஏ.ஓ, வெங்கடேசன் உணவு அருந்தாமல் பொது மக்களிடம் மாலை வரை மனுக்களை சரி பார்த்து பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோவையில் பைக் டாக்ஸி, வாடகைக்கு பயன்படுத்தப்பட்ட சொந்த கார்கள் பறிமுதல்

## ரூ.1.8 லட்சம் அபராதம் விதிப்பு

கோவை, ஆக.10-

‘பைக் டாக்ஸி’ மற்றும் வாடகைக்கு பயன்படுத்தப்பட்ட சொந்த கார்களை வட்டார போக்குவரத்து துறை அதிகாரிகள் இன்று பறிமுதல் செய்தனர்.

கோவை டாக்ஸி ஓட்டுநர் மற்றும் உரிமையாளர்கள் கோரிக்கை மற்றும் புகார்கள் அடிப்படையில் கோவை சரக இணை போக்குவரத்து ஆணையர் ந.அழகரசு உத்தரவின்பேரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர், கோவை (மையம்) விஸ்வநாதன் தலைமையில் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர்கள் சிறப்பு சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில் சொந்த பயன்பாட்டு வாகனங்கள்(கார்கள்) 6 வாடகைக்கு பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது. மேலும் 12 இருசக்கர வாகனங்கள் ‘ரேபிடோ’ செயலி மூலம் வாடகைக்காக இயக்கப்படுவது கண்டறியப்பட்டது. மோட்டார் வாகன சட்டம் 1988 விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டதால் அவை பறிமுதல் செய்யப்பட்டன.

மொத்தம் ரூ.1.8 லட்சம் அபராத தொகை விதிக்கப்பட்டது. இதுபோன்ற சோதனைகள் தொடந்து நடத்தப்பட்டு மோட்டார் வாகன சட்டத்திற்கு புறம்பாக இயக்கப்படும் அனைத்து வாகனங்களுக்கும் சோதனை அறிக்கை வழங்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிவகங்கை மாவட்ட காவல்துறையில் முதிர்ந்த மற்றும் உதிரா நிலையில் உள்ள காவல் வாகனங்களை பொது ஏலத்தில் ஏலம் விடப்படுவதாக தகவல்

சிவகங்கை, ஆக.10-

சிவகங்கை மாவட்ட காவல் துறையில் முதிர்ந்த மற்றும் உதிரா நிலை யில் உள்ள காவல் வாகனங்களை பொது ஏலத்தில் ஏலம் விடப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது மேலும் 21/08/2025 அன்று சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற உள்ளது ஏலம் எடுக்க விருப்பமுள்ளவர்கள் 21/08/2025 அன்று காலை 6 மணி முதல் 10 மணி வரை 1000/ முன்வைப்பு தொகையினை செலுத்தி ஏலம் எடுக்க தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் தெரிவித்துள்ளார்.






# தமிழ்நாடு அறிவில் இயக்கம் சார்பாக கல்லலில் இரத்ததான முகாம்

கல்லல், ஆக.10-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கல்லல் கிளை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் செம்பனூர் அரசு வட்டார மருத்துவமனை காரைக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை இரத்த வங்கி சார்பாக கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு இரத்ததான முகாம் நடைபெற்றது. அறிவியல் பாடலுடன் துவங்கிய துவக்க விழா நிகழ்ச்சியில் கல்லல் துளிர் இல்ல பொறுப்பாளர் நாகரத்தினம் வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி தொடக்க உரையில் இரத்ததான விழிப்புணர்வு பற்றி எடுத்துக் கூறினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் இரத்ததானத்தின் முக்கியத்துவத்தை தனது தலைமையுரையில் எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினர்களாக காரைக்குடி இரத்த வங்கி மருத்துவ அலுவலர் மருத்துவர் மணிமாறன் செம்பனூர் அரசு வட்டார மருத்துவமனை மருத்துவர் கார்த்தீஸ்வரன் மற்றும் காரைக்குடி குருதிக் கொடையாளர்கள் அறக்கட்டளை நிறுவனர் முனைவர் பிரகாஷ் மணிமாறன் கலந்து கொண்டனர். அருட்தந்தை கிறிஸ்டோபர் விழாவில் முன்னிலை வகித்ததுடன் முதல் கொடையாளராக இருந்து இரத்ததானம் செய்தார். செம்பனூர் வட்டார அரசு மருத்துவமனை ஆலோசகர் தாமஸ் ஆரோக்கியம் மற்றும் சுகாதார ஆய்வாளர் ரமேஷ் வாழ்த்துரை வழங்கினர். முகாமின் பொறுப்பாளர்களாக கல்லல் கிளைத் தலைவர் தனுசு ஸ்டாலின் பொருளாளர் சக்திவேல் தேவையான ஏற்பாடுகளை செய்தனர். 24 க்கும் மேற்பட்ட இரத்தக் கொடையாளர்கள் தங்கள் இரத்தத்தை கொடுத்து மகிழ்ந்து சென்றனர். கொடையாளர்களுக்கு பழச்சாறு சான்றிதழ் புத்தகங்களும் பரிசாக வழங்கப்பட்டன. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டப் பொருளாளர் பிரபு முகாமின் ஒருங்கிணைப்பாளராகவும் கல்லல் கிளை செயற்குழு உறுப்பினர் விநாயகமூர்த்தி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு சிறப்பாக முகாமை நடத்தினர்.

# இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பொதுமக்களை சந்தித்து கோரிக்கைகள் குறித்து மனுக்கள் பெற்றார்

இராமநாதபுரம், ஆக.10-

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்தில் மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் பொதுமக்களை சந்தித்து கோரிக்கைகள் குறித்து மனுக்கள் பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்களிடம் கோரிக்கைகள் குறித்து மனுக்கள் பெற்று மனுக்கள் மீது துறை அலுவலர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் குடிநீர் வழங்கிட திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




அதேபோல் மின்சாரம் தடையின்றி கிடைப்பதற்கு அனைத்து பகுதிகளிலும் புதிய மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளது. வேளாண் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில் பாசன கால்வாய்கள் வரத்து கால்வாய்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. நான்காண்டுகளில் சுமார் ரூ.1,200ಃ கோடிக்கு மேல் வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் மிகவும் சிறிய கிராமங்களுக்கும் பேருந்துகள் சென்று வரும் வகையில் அரசு பேருந்துகள், மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமின்றி ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மூலம் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டி தரப்படுகின்றன. மகளிர் திட்டத்துறை மூலம் மகளிர்கள் சுயதொழில் மேற்கொண்டு பொருளாதாரம் பெற்றிடும் வகையில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கும் முழுமையாக சென்றடையும் வகையில் ‘உங்களுடன் ஸ்டாலின் திட்டம”; துவங்கப்பட்டு அரசு அலுவலர்கள் பொதுமக்களை நேரில் சந்தித்து கோரிக்கை குறித்து கேட்டறிந்து நிறைவேற்றி வருகிறார்கள். அதேபோல் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் ஆரோக்கியமுடன் இருந்திடும் வகையில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம் துவங்கப்பட்டு அனைவருக்கும் இலவசமாக முழு உடல் மருத்துவ பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு மருத்துவ சிகிச்சையும் வழங்கப்படுகிறது. இவ்வாறான எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். பொதுமக்கள் அரசின் திட்டங்களை பெற்று பயன்பெற்றிட வேண்டும் என மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்.

# மேட்டூருக்கு நீர்வரத்து 21,135 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர், ஆக.10-

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் பரவலாக மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அணைக்கு நேற்று முன் தினம் காலை விநாடிக்கு 17,906 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 21,135 கனஅடியாக அதிகரித்தது.



அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 16,000 கனஅடி, கால்வாய் பாசனத்துக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் திறப்பைவிட நீர் வரத்து அதிகமாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. அணை நீர்மட்டம் நேற்று 119.06 அடியாகவும், நீர் இருப்பு 91.97 டிஎம்சியாகவும் இருந்தது.





# தாம்பரம் அடுத்த திருவஞ்சேரி ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

தாம்பரம், ஆக.10-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதிக்குட்பட்ட திருவஞ்சேரி ஊராட்சியில், ஆகஸ்ட் (07) “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“ தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலில், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், எஸ். ஆர். ராஜா தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர், ஜனனிசுரேஷ்பாபு அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் முகாமில் தன்னார்வலர்கள் மனுக்களை பூர்த்தி செய்து கொடுத்தனர் .முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி சமுதாய நலக்கூடம் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்”

சோழிங்கநல்லூர், ஆக.10-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : இடம் : சென்னை மாநகராட்சி 15 மண்டலம், செம்மஞ்சேரி சமுதாய நலக்கூடம் ஆகஸ்ட் (07) “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“ தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட் டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 200 வது மாமன்ற உறுப்பினர், அ. முருகேசன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், எம் .எல்.ஏ, பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை வாங்கி துறை சார்ந்த அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் தன்னார்வலர்கள் மனுக்களை பூர்த்தி செய்து கொடுத்தனர் .முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மக்களுக்கு சான்றிதழை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




■ தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் .த.மனோ தங்கராஜ் கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் சட்டமன்றத்திற்குட்பட்ட சித்திரங்கோடு டிரினிட்டி சென்ட்ரல் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முழு உடல் பரிசோதனை முகாமினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். உடன் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் .வினய்குமார் மீனா, உட்பட பலர் உள்ளார்கள்.

## தென்காசி மாவட்டம் புளியங்குடி வட்டத்தில் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” பன்நோக்கு மருத்துவ முகாமில்

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் சதன்திருமலைக்குமார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் கலந்து கொண்டார்கள்

தென்காசி, ஆக.10-

தென்காசி மாவட்டம் புளியங்குடி வட்டம் இந்துநாடார் உறவின் முறை கமிட்டி மேல்நிலைப் பள்ளியில் இன்று (09.08.2025) இரண்டாம் கட்டமாக நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” பன்நோக்கு மருத்துவ முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர். திருமதி. ராணி ஸ்ரீகுமார் அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். திரு.சதன்திருமலைக்குமார் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது,



பொது மக்கள் உடல் பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக காணொளி காட்சி வாயிலாக தமிழ்நாடு முழுவதும் துவக்கி வைத்தார்கள். அதன் அடிப்படையில் இன்றைய தினம் இரண்டாம் கட்டமாக தென்காசி மாவட்டம் புளியங்குடி வட்டம் இந்துநாடார் உறவின் முறை கமிட்டி மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதவியல், நரம்பியல், தோல்,, பல், கண், காது மூக்கு தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் நடைபெறுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ், பரிசோதனை, முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ், பரிசோதனை, முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

“நலம் காக்கும் ஸ்டாலின்” பன்நோக்கு மருத்துவ முகாம் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. எனவே, இம்முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன், இணை இயக்குநர்(நலப்பணிகள்) மரு.பிரேமலதா, வட்டார மருத்துவ அலுவலர் மரு.ராதிகா, புளியங்குடி நகர்மன்ற தலைவர் திருமதி. விஜயா சௌந்திர பாண்டியன், புளியங்குடி நகர்மன்ற துணைத்தலைவர் திரு.அந்தோணிசாமி, புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திருமதி. இராமதிலகம் மற்றும் மருத்துவ அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ பணியாளர்கள். அரசு அலுவலர்கள், பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 7 மாதத்தில் பொதுமக்கள் தவறவிட்ட, 1.40 கோடி ரூபாய் மதிப்பிலான 930 செல்போன்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாகவும், போலி பணி நியமன ஆணை வழங்கப்பட்ட சம்பவத்தில் 24 மணி நேரத்தில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே வன்னிக்குடி கரிசல்குளம் கிராமம் மதுரைராமேஸ்வரம் நான்கு வழிச்சாலையில் சாலையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த சரக்கு வாகனம் மீது மதுரையை நோக்கிச் சென்ற கார் மோதி நேற்று விபத்துக்குள்ளானது இதில் காரில் பயணித்தவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# கன்னியாகுமரி ஜவான்ஸ் நடத்தும் மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி

கன்னியாகுமரி, ஆக.10-

சுதந்திர தின விழா, பசுமை மற்றும் தூய்மையை வலியுறுத்தும் விதமாக கன்னியாகுமரி மாவட்ட கைப்பந்து கழகத்தின் அனுமதியுடன் கன்னியாகுமரி ஜவான்ஸ் 2025ஆண்டிற்க்கான மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி நேற்று முளகுமூடு புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது.

இப்போட்டியினை தக்கலை காவல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.




# சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் புதிய முதல்வர் நியமனம்

சிவகங்கை, ஆக.10-

தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநராக டாக்டர் ஏ.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநராக டாக்டர் டி.கே.சித்ரா உட்பட 11 மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் நியமனம் செய்து மருத்துவத் துறை செயலாளர் செந்தில்குமார் உத்தரவிட்டுள்ளார். தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநராக டாக்டர் ஏ.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநராக டாக்டர் டி.கே. சித்ராவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிவகங்கை மாவட்டம் மருத்துவ கல்லூரி முதல்வராக மருத்துவர் ஆர். சரோஜினி நியமனம் செய்யப்பட்டுள்ளார்

# கல்லல் முருகப்பா பள்ளியில் ஹிரோஷிமா தினம்

1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் முடிவடையும் தருவாயில் ஜப்பான் மீது அமெரிக்கா உலகிலேயே சக்தி வாய்ந்த அணுகுண்டை வீசியது. ஜப்பானில் மிகப்பெரிய அளவிற்கு உயிரிழப்பை இது ஏற்படுத்தியது. உலக நாடுகளை அச்சம் கொள்ள வைத்த இந்த சம்பவமானது பின்னாளில் போர் இல்லாமல் அமைதியை காக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை உலக நாடுகளில் விதைக்க காரணமாக அமைந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 6 ஆம் நாள் மற்றும் 8 ஆம் நாள் முறையே ஹிரோஷிமா தினம் மற்றும் நாகசாகி தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிவியல் ஆசிரியரும், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட பொருளாளருமான பிரபு உலகினை அழித்திடும் யுத்தமே வேண்டாம் என்ற அறிவியல் பாடலுடன் உலகின் சக்தி வாய்ந்த






‘லிட்டில் பாய்’ அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட பாதிப்பு என்ன என்பதை விளக்கிக் கூறினார். கணித ஆசிரியர் அண்ணாத்துரை புத்தர் தான் கடைபிடித்த அமைதிக் கொள்கை மூலம் எவ்வாறு உலக மக்களை கவர்ந்தார் என்பதை எடுத்துக் கூறினார். போரால் முடியாததை அகிம்சை மூலம் எப்படி மகாத்மா காந்தி வென்றார் என்பதை ஆசிரியை கற்பகவல்லி எடுத்துரைத்தார். ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதற்கான காரணத்தை எடுத்துக் ஆசிரியை விஜயராணி விளக்கினார். வருங்கால தலைமுறையினர் போர் , சண்டை, சச்சரவு, வன்முறை இல்லாமல் அமைதியான சமுதாயத்தை உருவாக்கிட முன்வர வேண்டும் என் பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் மத்தியில் ஆசிரியர்கள் எடுத்துக் கூறினார்.

# தமிழகத்தில் கடந்த 7 மாதங்களில்உணவுப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 6,272 பேர் கைது: போலீஸ் ஐ.ஜி.ரூபேஷ் குமார் மீனா தகவல்

மதுரை, ஆக.10-

தமிழகத்தில் கடந்த 7 மாதங்களில் உணவுப் பொருள் கடத்தலில் ஈடு பட்ட 6,272 பேரை உணவுப்பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்துள்ளதாக ஐ.ஜி. ரூபேஷ் குமார் மீனா தெரிவித்துள்ளார் .

ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்து வருகிறது. அவ்வாறு, விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களை சிலர் முறைகேடாக கடத்தி கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர். குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு, அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் அதற்கு உடந்தையாக செயல் படும் நபர்கள் மீதும், கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மீதும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களை கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980 ன்படி தடுப்புகாவலில் வைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, 01/01/2025 முதல் 31/07/2025 வரை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் மொத்தம் 6,025 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில், 2,342 டன் பொது விநியோகத் திட்ட அரிசி, 13,720 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் 1,725 சமையல் எரிவாயு உருளைகள் மற்றும் இதர 64 வழக்குகளுடன் அத்தியாவசியப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 1,84,41,328/ (ஒரு கோடியே என்பத்து நான்கு லட்சத்து நாற்பத்தோராயிரத்து முனூற்று இருபத்து எட்டு) ஆகும். இக்குற்றங்களில் ஈடுபட்ட 6,272 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது விநியோகத்திட்ட பொருட்களை கடத்துவதற்கு பயன்படுத்தப் பட்ட 1,362 வாகனங்கள் பறி முதல் செய்யப்பட்டுள்ளன, மேலும் கடத்தலில் பயன் படுத்தப்பட்ட 2,880 வாகனங்கள் அரசுக்கு அபராதத் தொகை செலுத்திய பின் விடுவிக்கப் பட்டுள்ளன. கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத் தின் கீழ் 70 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இன்றியமையாப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் தொடர்பாக பொது மக்கள் புகார் அளிக்க 1800 599 5950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161